மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படியே இருந்தாலும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே அது அடங்காது. இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கூறப்பட்டது அல்ல தான் கொடுத்தது என்று அம்மையார் அவர்களே சொல்லிவிட்டதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே அவர்களைத் தாங்கள் அனுமதிக்க இயலாது என்று கூறியிருப்பது முறையானதுதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்னையும் பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. நீங்கள் கொடுத்தது என்ன ஆயிற்று என்று அறையிலே வந்து கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் கொடுத்து கிட்டத்தட்ட 10 நாளைக்குமேல் ஆகிவிட்டது. என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கட்சியிலே இருந்து பல உறுப்பினர்கள் கொடுத்திருந்தால் அந்தக் கட்சியிலிருந்து ஒருவர் கொடுத்ததைத்தான் அனுமதிக்கலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு நான் என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

### (3) அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்குமேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.